106. கூற்று (A): சயனோ பாக்டீரியா புரோகேரியாட்டிக் செல் வகையைச் சார்ந்தது.

காரணம் (R): தெளிவற்ற உட்கரு (நியூக்ளியாய்டு) காணப்படும்.

1. A தவறு ஆனால் R சரியானது
2. A சரி ஆனால் R தவறானது.
3. A மற்றும் R இரண்டும் சரியானவை.
4. A மற்றும் R இரண்டும் தவறானவை.

107. தாவர செல்லினை நுண்ணோக்கியில் காண வெங்காய தோலை எதனைக் கொண்டு சாயமேற்றப்படுகிறது.?

1. அயோடின் கரைசல்
2. உப்புக் கரைசல்
3. கனடா பால்சம்
4. ஜானஸ் பச்சை

108. உடலின் செயல்களை ஒருங்கிணைத்தல் மற்றும் செய்தி பரிமாற்றம் செய்யும் செல் ______.

1. நரம்பு செல்கள்
2. எபிதீலியல் செல்கள்
3. இரத்த செல்கள்
4. தசைச் செல்கள்

109. உடலின் பல்வேறு பகுதிகளுக்கு $O_2$ எடுத்துச் செல்வதும், அப்பகுதிகளிலிருந்து $CO_2$ சேகரிக்கும் செல்கள் யாவை?

1. நரம்பு செல்கள்
2. இரத்த செல்கள்
3. தசைச் செல்கள்
4. எபிதீலியல் செல்கள்

110. உடலின் மேற்பரப்பை மூடிப் பாதுகாக்கும் செல் ______.

1. தசைச் செல்கள்
2. நரம்பு செல்கள்
3. இரத்த செல்கள்
4. எபிதீலியல் செல்கள்

111. செல்லின் "சேமிப்புக்கிடங்கு" என அழைக்கப்படுவது ______.

1. ரிபோசோம்கள்
2. நுண்குமிழ்கள்
3. மைட்டோகாண்ட்ரியா
4. எண்டோபிளாசவலை

112. யூகேரியாட் செல்லில் நுண்ணுறுப்புகள் காணப்படும் இடம் ______.

1. செல்சுவர்
2. நியூக்ளியோபிளாசம்
3. நுண்குமிழ்
4. சைட்டோபிளாசம்

113. கூற்று (A): திசு என்பது மாறுபட்ட செல்களைக் கொண்ட ஒரு குழு.

காரணம் (R): தசைத்திசு, தசைச் செல்களால்ஆனது.

1. A சரிஆனால் R தவறானது.
2. A தவறு ஆனால் R சரியானது.
3. A மற்றும் R இரண்டும் சரியானவை.
4. A மற்றும் R இரண்டும் தவறானவை.

114. கூற்று (A): பெரும்பான்மை செல்களை நேரடியாக வெறும் கண்களைக் கொண்டுபார்க்க முடியாது.

காரணம் (R): செல்கள் மிக நுண்ணியது.

LIVEWORKSHEETS

1. A தவறு ஆனால் R சரியானது.

2. A மற்றும் R இரண்டும் சரியானவை.

3. A மற்றும் R இரண்டும் தவறானவை.

4. A சரிஆனால் R தவறானது.

115. முப்பரிமாணத்தில் தாவர செல்லின் வடிவம் _______.

1. கனசதுர வடிவம்

2. ஒழுங்கற்ற வடிவம்

3. வட்ட வடிவம்

4. கோள வடிவம்

116. உட்கருவின் உள்ளே காணப்படுவது _______.

1. உட்கருதுளை மற்றும் குரோமேட்டின்

2. உட்கருமணி மற்றும் குரோமேட்டின்

3. உட்கரு மற்றும் குரோமேட்டின்

4. உட்கருமணி மற்றும் உட்கருதுளை

117. பசுமைநிற நிறமியின் பெயர் என்ன?

1. சாந்தோஃபில்

2. பசுங்கணிகம்

3. குளோரோஃபில்

4. குளோரோஃபையேசி

118. செல்லில் சக்தியை வழங்குவதற்கு உதவும் மூலப்பொருளின் பெயர் என்ன?

1. அடினோசின் டை பாஸ்பேட்

2. அடினோசின் ட்ரை பாஸ்பேட்

3. 1 மற்றும் 2 இரண்டும்

4. இவற்றில் எதுவுமில்லை

119. வயிறு, ஈரல், தண்டு போன்றவை _______ ஆகும்.

1. உறுப்பு

2. செல்

3. திசு

4. உயிரினம்

120. பின்வருவனவற்றில் எவை விலங்கு செல்லில் உள்ளது?

1. மைட்டோகாண்ட்ரியா, செல், சைட்டோபிளாசம், செல்சுவர்

2. பசுங்கணிகங்கள், சைட்டோபிளாசம், செல் வெற்றிடப்பை, உட்கரு

3. உட்கரு, செல்சவ்வு, மைட்டோகாண்ட்ரியா, சென்ட்ரியோல், சைட்டோபிளாசம்

4. பிரதான செல், வெற்றிடப்பை, டிக்டியோசோம், மைட்டோகாண்ட்ரியா

121. ஏ.டி.பி. (ATP) உற்பத்தி செய்யும் செல் உறுப்பு எது?

1. பசுங்கணிகங்கள்

2. மைட்டோகாண்ட்ரியா

3. வெசிகில்

4. உட்கரு

122. தக்காளியின் சிவப்பு நிறத்திற்குக் காரணம் _________

1. பீட்டாகரோட்டின்

2. குளோரோஃபில்

3. கரோட்டின்

4. லைகோபின்

123. கூற்று (A): செல்லில் சொரசொரப்பான எண்டோபிளாச வலைப்பின்னல் காணப்படுகிறது.

காரணம் (R): ரிபோசோம்கள் இணைந்து (அ) ஒட்டிக் காணப்படுகின்றன.

1. A மற்றும் R இரண்டும் சரியானவை.

2. A சரி, ஆனால் R தவறானது.

3. A தவறு, ஆனால் R சரியானது.

4. A மட்டும் R இரண்டும் தவறானவை.

LIVEWORKSHEETS

124. அழிக்கும் படை வீரர்கள் என அழைக்கப்படும் செல் நுண்ணுறுப்பு யாது?

1. மைட்டோகாண்ட்ரியா
2. லைசோசோம்
3. எண்டோபிளாச வலை
4. கால்ஜி உடலம்

125. கீழ்கண்டவற்றுள் எது சரியானது?

1. தவளை முட்டை > கோழி முட்டை > நெருப்புக்கோழி
2. பாம்பு முட்டை < பறவை முட்டை < தாவர செல்
3. நெருப்புக்கோழி முட்டை > கோழி முட்டை > தவளை முட்டை
4. வைரஸ் செல் > கோழி முட்டை > பாக்டீரியா செல்

**NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:**

126. உட்கருவை கண்டுபிடித்தவர் ______. (NMMS - 2011)

(1) ராபர்ட் ஹுக் (2) பர்கின்ஞ்சி (3) ராபர்ட் பிரௌன் (4) மோல்

127. செல்லின் ஆற்றல் மையம் ______. (NMMS - 2011)

(1) பசுங்கணிகம்
(2) மைட்டோகாண்டிரியா.
(3) ரைபோசோ
(4) எண்டோபிளாச வலை

128. செல் பிரிதலின் போது ______ கதிர் இழை நார்களையும், ஆஸ்ட்ரல் உறுப்புகளையும் உருவாக்குகிறது (NMMS - 2018)

(1) மைட்டோகாண்ட்ரியா
(2) சென்ட்ரியோல்
(3) லைசோசோம்
(4) ரிபோசோம்

129. ஒவ்வொரு செல்லும் அதன் அருகில் உள்ள செல்களுடன் இணைத்துக் கொள்ளும் துவாரம் ______. (NMMS - 2020 - 21)

(1) சைக்ளோ டெஸ்மாட்டா
(2) பிளாஸ்மோ டெஸ்மாட்டா
(3) நியூக்ளியோ டெஸ்மாட்டா
(4) புரோட்டோ டெஸ்மாட்டா

130. உட்கருவின் உள்ளே உள்ள திரவம் ______ என்றும், வெளியே உள்ள திரவம் ______ என்றும் அழைக்கப்படுகிறது. (NMMS - 2020 - 21)

(1) சைட்டோபிளாசம், புரோட்டோபிளாசம்
(2) பசுங்கணிகம், புரோட்டோபிளாஸ்ட்
(3) நியூக்ளியோ.·.பிளாசம், சைட்டோபிளாசம்
(4) ஜெர்ம்ப்ளாசம், என்டோபிளாசம்

LIVEWORKSHEETS